**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4170

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.04.2021

Accepted: 020.05.2021

Published: 01.07.2021

Citation:
Lakshmi, G. "The Novel 'Ezharaippangali Vagaiyara' from the Perspective of Cultural Anthropology." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 116–121.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4170

*Corresponding Author:
lakshmiganesanv@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Novel 'Ezharaippangali Vagaiyara' from the Perspective of Cultural Anthropology

**G. Lakshmi**

*Full Time Ph.D. Scholar*

*Research Department of Tamil, Lady Doak College, Madurai*

https://orcid.org/0000-0003-4246-0956

**Abstract -** 'Culture' is the gradual development of civilization in human society. Every society has its own behaviors according to its ethnicity. Elements of culture are found in everything from spoken language, relationship levels, artefacts, arts, professions, oral traditions, religious festivals, beliefs, and rituals. They have been quoted in the literature ever since. Thus many novels tell the life story of the Islamic people. In which s. Arshia's novel 'Ezharaippangali Vagaiyara' is one of them. These novels, which focus on the life of the Islamic people, reveal the culture of that community. Cultural anthropology, a branch of anthropology, is at the forefront of this modern-day study. According to the semantic and non-material elements of 'cultural anthropology', research is carried out on the novel of the sevenfold genre. This study is based on the idea that one can know the culture of a society in terms of the principles stated by 'cultural anthropology'.

**Key Words:** Tamil Nolvels/ Criticism, Cultural Anthropology, Material Elements, Non-Material Elements, Cognitive, Elements, Ethical Elements, Optimism, Realism, Cultural Movements

**References**

1. Cultural Anthropology - Bhagwatsalabharati - Meyyappan Publishing - November, 1990
2. Cultural History-1- KV Balasubramanian-Tamil Internet Academy
3. Characteristics of Indian Culture - Textbook Institute of India

# பண்பாட்டு மானிடவியல் நோக்கில் "ஏழரைப்பங்காளி வகையறா" புதினம்

*க. லெட்சுமி (F10302)*
முழுநேர முனைவா் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித சமுதாயத்தில் படிப்படியாக ஏற்படுகிற நாகரிக வளர்ச்சியே "பண்பாடு" எனப்படுகிறது. ஓவ்வொரு சமுதாயமும் தான் சார்ந்த இனத்திற்கு ஏற்ப நடத்தைமுறைகளைக் கொண்டுள்ளது. பேசும் மொழி, உறவு நிலைகள், புழங்கு பொருட்கள், கலைகள், தொழில்கள், வாய்மொழி வழக்காறுகள், சமயம் சார்ந்த திருவிழாக்கள், நம்பிக்கைகள், சடங்குகள் போன்ற அனைத்திலும் பண்பாட்டின் கூறுகள் காணப்படுகின்றன. அவ்வகையில் இசுலாமிய மக்களின் வாழ்வியலை பல புதினங்கள் எடுத்துரைக்கின்றன. அதில் எஸ். அர்ஷியா எழுதிய "ஏழரைப்பங்காளி வகையறா" புதினமும் ஒன்றாகும். இசுலாமிய மக்களின் வாழ்வியலை மையமிட்டு எழுதப்பட்ட இந்தப் புதினத்தில் அச்சமூக மக்களின் பண்பாடும் வெளிப்படுவதை அறியலாம். இப்புதினத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வில் மானிடவியலின் ஒரு பிரிவான பண்பாட்டு மானிடவியல் முதன்மையிடம் வகிக்கிறது. "பண்பாட்டு மானிடவியல்" கூறுகின்ற பொருள்சார் மற்றும் பொலுள்சாரா கூறுகளின்படி, ஏழரைப்பங்காளி வகையறா புதினத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் நாவல், திறனாய்வு, எழமைப்பங்களி வரையறா, எஸ். அர்ஷியா பண்பாட்டு மானிடவியல், பொருள்சார் கூறுகள், பொருள்சாரா கூறுகள், அறிதல் சார் கூறுகள், நெறியியல் கூறுகள், உகந்தநிலைப் பண்பாடு, உண்மைப் பண்பாடு, பண்பாட்டு அசைவுகள்*

## முன்னுரை

மனிதனானவன் தான் சார்ந்த குழுவிற்கு (அ) இனத்திற்கு ஏற்ப தனித்துவமிக்க அடையாளங்களைக் கொண்டுள்ளான். அவற்றை தன் அடுத்த தலைமுறைக்கும் கடத்த முற்படுகின்றான். இந்த அடையாளங்களே பண்பாடாக சித்தரிக்கப்படுகிறது. தான் சார்ந்த இனத்தின் நடத்தை முறைகளின் சேர்மமாக "பண்பாடு" கருதப்படுகிறது. இது இனத்திற்கு இனம் வேறுபடுகிறது. அவ்வகையில் இசுலாமிய சமூகமும் தனக்கென தனி பண்பாட்டைக் கொண்டுத் திகழ்கிறது. இசுலாமிய மக்களின் தனித்துவமான பண்பாடுகளை தமிழ் இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன. மனித சமுதாயத்தின் பண்பாட்டினை ஆராயும் ஒரு கருவியாக "பண்பாட்டு மானிடவியல்" துறை செயல்படுகிறது. ஒரு சமுதாயத்தின் அசைவுகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் பண்பாட்டினைக் காண விளைகிறது. எனவே பண்பாட்டு மானிடவியல் நோக்கில் "ஏழரைப்பங்காளி வகையறா" புதினத்தினை ஆய்வு செய்யும்விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## பண்பாட்டு மானிடவியல்

"பண்பாடு" என்னும் சொல் பல வரையறைகளை உள்ளடக்கியது. "சமூக இயல் அறிஞர்களின் கருத்தின்படி, பண்பாடு என்பது, வாழும் முறை

என்பதாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உள்ளது. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும்" என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறுகிறார். "தனிச் சிறப்புக் கூறுகள் நிறைந்த தனி இனச் சமுதாயத்தினரின் பண்புகளே "பண்பாடு" எனக் குறிப்பிடத்தக்கனவாகும்" என்கிறார்கள் அமெரிக்க மானிடவியலாளர்கள். பண்பாட்டு மானிடவியல் என்பது மனித சமுதாயத்தின் பண்பாட்டினை அடையாளம் காண ஏற்படுத்தப்பட்ட ஒரு கருவியாகும். பண்பாட்டின் அமைப்பினை பொருள்சார் பண்பாடு மற்றும் பொருள்சாரா பண்பாடு என இரண்டாக பிரிக்கலாம்.

## பொருள் சார் பண்பாடு

ஒரு சமூகத்தைச் சார்ந்த மக்கள் பயன்படுத்தும் பொருள்கள் அச்சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன. "பொருள்சார் கூறுகள் மக்களின் தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டவையாதலால் அத்தேவைகள் நிலைபெற்றுள்ளவரை அக்கூறுகளும் அவர்களின் பண்பாட்டில் நிலைத்திருக்கும்" (பண்பாட்டு மானிடவியல் பக். 158) என்கிறார் பக்தவத்சல பாரதி. உதாரணமாக சாலைகள், கட்டடங்கள், இயந்திரங்கள், வீட்டுப்பொருட்கள், அழகுப்பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள் போன்றவற்றை கூறலாம். இவை மக்களின் சிந்தனை முறை, உணர்வுகள், அறிவு, அழகுணர்வு போன்ற பல பொருள்சாராக் கூறுகளை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றன. இதனால் மக்களின் பண்பாடு வெளிப்படுகிறது.

ஏழரைப்பங்காளி வகையறா புதினத்தில் வரும் ரஜாக் சாயுபுவின் தோற்றத்தைப் புதினம் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறது. "வெளியில வந்துட்டாருன்னா, மஸ்லீன் ஜிப்பாதான். மணக்குற செண்ட்தான். தலையில, நூல் தொப்பி வெச்சு, அமர்க்களமா இருப்பாரு!" (பக். 35). இதில் பொருள்சார் கூறுகளாக விளங்குகின்ற ஜிப்பா, செண்ட், தொப்பி போன்றவை இசுலாமிய மக்களின் தோற்றத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

"கரீம் பீடிக்கட்டையையும் வெட்டும்புலி தீப்பெட்டியையும் அவரு மறந்ததே இல்லை. எப்பப் பாத்தாலும் விரல் இடுக்குல பொகைஞ்சுக்கிட்டே இருக்குற கரீம்பீடி அவருக்கு ஆறாவது விரல்!" (பக். 40) என்ற வரிகளில் காணப்படுகிற பொருள்சார் கூறுகளான தீப்பெட்டி, பீடி ஆகியவை புகைப்பிடிக்கும் பழக்கம் இசுலாமிய சமூக மக்களிடையே இருப்பதை உணர்த்துகின்றன. "அவருக்கிட்ட ஒரு மூட்டைப் பூச்சி கார் இருந்துச்சு. காரு வெச்சுருந்தா, அவங்க சமூகத்துல பெரிய ஆளு" (பக்.42), "பேருலதான் அது, தோப்பு வீடு, மத்தபடி அது வசதியான ஒரு பெரிய்ய்ய்ய வீடு!" (பக்.43) என்ற வரிகளில் காணப்படும் பொருள் சார் கூறுகளான கார் மற்றும் வீடு ஆகியவை அச்சமூக மக்களின் பொருளாதார நிலையை காட்டுகின்றன ஒரு சமூகத்தின் பண்பாடு என்பது அச்சமூக மக்கள் பயன்படுத்து கிற பொருள்சார் கூறுகளையும் சார்ந்தது என்பதை அறிய முடிகிறது.

## பொருள் சாராப் பண்பாடு

பொருள் வடிவம் பெறாத கூறுகள் பொருள் சாராப் பண்பாட்டில் இடம்பெறும். மனதளவில் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருப்பவை பொருள் சாராப் பண்பாட்டில் அடங்கும். "எடுத்துக்காட்டாக கருத்துகள், பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், அறிதிறன், அழகியல் சிந்தனைகள், கற்பனை, நடிப்பு, இலக்கியங்கள், பாடல்கள், இசை, நடனம், உணவு உண்ணும் முறை, தலைவாரும் முறை, வணக்கம் செலுத்தும் முறை, மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பொருள் வடிவம் பெறாத அனைத்தும் அதில் இடம்பெறும்" (பண்பாட்டு மானிடவியல் பக்.165) என்கிறார் பக்தவத்சல பாரதி.

இந்த பொருள்சாரா பண்பாடு அறிதல் சார் கூறுகளையும், நெறியியல் கூறுகளையும் உள்ளடக்கியது.

### அறிதல்சார் கூறுகள்

அறிதல்சார் கூறுகள் என்பவை மக்களின் அறிவோடுத் தொடர்புடையவை. இந்த உலகம் குறித்தும், அதிலுள்ள பொருட்கள் குறித்தும், இயற்கை குறித்தும் மக்கள் தாங்கள் அறிந்து கொண்டவற்றை அவர்கள் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் காண்பதே அறிதல் சார் கூறாகும். "ஒரு பண்பாட்டின் அறிதல் சார் கூறுகள் என்பவை அப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களின் "அறிதிறன்" கூறுகளைக் குறிக்கும்" (பண்பாட்டு மானிடவியல் பக்.64) என்கிறார் பக்தவத்சல பாரதி. மக்களின் அறிவு சார்ந்தவைகளும் அவர்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன. "பாரு, அந்த நாயி ஒடம்பைச் சிலுத்துக்கிட்டு ஓரமாப்போய் படுத்துக்கும். இஜ்ராஹில் வர்றது நாய்களுக்குத் தெரிஞ்சுரும். இஜ்ராஹில் உள்ளாறப் போயிட்டான்." (பக்.300) என்ற வரிகள் விலங்கினங்களைக் குறித்த மக்களின் அறிவைக் காட்டுகின்றன. ஒருவர் இறக்கும் தருவாயில் இருக்கும் போது, அவர் வீட்டின் அருகில் நாயானது உடலை சிலிர்த்துக்கொண்டு ஓரமாக சென்று படுத்தால் உடல்நிலை சரியில்லாதவர் இறந்துவிடுவார் என அச்சமூக மக்கள் நம்புகின்றனர். அவ்வாறே அம்மனிதர் இறந்தும் விடுகிறார். இந்த விலங்கு இவ்வாறு செய்தால் மனித வாழ்க்கையில் இந்த மாற்றங்கள் ஏற்படும் என்பது மக்களின் அறிவு சார்ந்ததாக உள்ளது. இது அவர்களின் அறிதல் சார் கூறாக உள்ளது.

### நெறியியல் கூறுகள்

நெறியியல் கூறுகளும் பொருள் சாரா பண்பாட்டில் அடங்குபவையே ஆகும். ஒரு சமூகத்தை நெறிப்படுத்துவதற்காக அச்சமூகத்தில் விதிக்கப்பட்ட விதிகளும், நடத்தை முறைகளும், அச்சமூகத்தின் பழக்கவழக்கங்களும், இறையியல் சார்ந்த நம்பிக்கைகளும், வழிபாடுகளும் இவற்றில் அடங்கும். இவையாவும் பண்பாட்டின் அசைவுகளாகக் காணப்படுகின்றன.

### குடிவழக்கு

ஒவ்வொரு சமூகத்திற்குமென தனித்தனியே குடிவழக்குகள் காணப்படுகின்றன. இசுலாமிய சமூகத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும்போது சலாம் செய்து கொள்வர். இது இச்சமூக மக்களிடையே காணப்படுகிற குடிவழக்காக உள்ளது. "ஜூம்மா தொழுகை முடிஞ்சது. எல்லாரும் சந்தோஷமா வாழ்த்துக்களைத் தெரிவிச்சுக்க, "முலாகத்" செஞ்சுக்குவாங்க" (பக்.176) வாழ்த்துக்களை தெரிவிக்க முலாகத் (ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுதல்) செய்து கொள்வர். ஐந்து நேரத் தொழுகை, குரான் ஓதுதுல் ஆகியவையும் இச்சமூக மக்களிடையே காணப்படுகிற குடிவழக்காக உள்ளது. பள்ளிவாசலில் பாங்கு சொல்லும் ஒலி கேட்டவுடன் இறைவனை வழிபடுவது இசுலாமியகுடிவழக்காகக்காணப்படுகிறது.

### நெறிமுறைகள்

நெறிமுறைகள் என்பவை வழிநடத்தக்கூடியவை. "மக்களின் நடத்தைமுறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் எனப்படும்" (பண்பாட்டு மானிடவியல் பக். 160) என்கிறார் பக்தவத்சல பாரதி. இசுலாமிய சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி நெறிமுறைகள் காணப்படுவதைப் புதினம் எடுத்துரைக்கிறது. "பசங்க எல்லாருமே ஜூம்மா தொழுகைக்குப் பள்ளி வாசலுக்கு வருவாங்க. பொம்பளைப்புள்ளைங்க, தொழுக வீட்டுக்குப் போயிரும்" (பக். 221) என்ற வரிகளிலிருந்து பள்ளிவாசலில் ஆண்கள் தொழுகை செய்ய வேண்டும் என்றும், வீட்டிற்கு சென்று பெண்கள் தொழுகை செய்ய வேண்டும் என்றும் அறிய முடிகிறது. மேலும் ஒருவரின் இறப்பு செய்தி உரிமையாளரிடமிருந்து வர வேண்டும் என்று எதிர்பார்க்காமல், யார் சொன்னாலும் அவ்விறப்பு நிகழ்ச்சியின் இறுதி சடங்கிற்கு

செல்ல வேண்டும். இதனை "இஸ்லாத்தைப் பொறுத்தவரைக்குச் சேதி வருதோ இல்லியோ தகவல் கெடைச்சாலே போயிறணும். அது தான் மனுஷம்ங்குது!" (பக்.301) என்ற வரிகளின் வழி அறியலாம்.

**இறையியல் சார்ந்த நம்பிக்கையும் வழிபாடும்**

தங்கள் குறையை இறைவன் தீர்ப்பான் என இசுலாமிய மக்கள் நம்புகின்றனர். "புள்ளை பெறந்தா ஒங்கப்பேரு வெக்கிறேன்னு நிய்யத்து செஞ்சுக்கிட்டு ஊர் திரும்பியிருக்காங்க" (பக். 36) என்ற வரிகளிலிருந்து இதனை அறியலாம். இறக்கும் தருவாயில் இருக்கும் ஒருவரை சுற்றியிருப்பவர்கள் ஆளுக்கு ஒரு பகுதியாக குரானை எடுத்து படிப்பர். அதனால் இறந்தவர்க்கு சொர்க்கம் கிடைக்கும் என்பது இசுலாமிய சமூக மக்களிடையே நம்பிக்கையாக காணப்படுகிறது. மேலும் இறந்தவரின் உடலை தூக்கிச் செல்பவர்களுக்கு அல்லாவின் கணக்கில் நல்ல பதவி கிடைக்கும் என இசுலாமிய மக்கள் நம்புவதைப் புதினம் எடுத்துரைக்கிறது.

**சட்டங்கள்**

குறிப்பிட்ட சமுதாயத்திற்கென்று சமதாயரீதியிலான சட்டங்கள் காணப்படுகின்றன. அச்சட்டங்கள் அச்சமுதாய மக்களால் கட்டிகாக்கப்படுகின்றன. "இவ்வகைச் சட்டங்கள் மரபுசார் சட்டங்கள் எனச் சிறப்பித்துக் கூறப்பெறும். இவ்வகைச் சட்டங்கள் எழுதப் பெறாமல் இருப்பதாலோ, இதன் சிறப்புத்தன்மை குறைந்துவிடவில்லை. அம்மக்களின் சமுதாயக் குழுவிற்கு அவை வலுவானதாகத் திகழ்கின்றன. (பண்பாட்டு மானிடவியல் பக்.163) என்கிறார் பக்தவத்சலபாரதி. ஏழரைப்பங்காளி வகையறா புதினத்தில் இசுலாமிய சமூகத்திற்கான சட்டங்கள் இருப்பது வெளிப்படுகிறது. திருமணத்தின்போது பெண்ணிடம் ஒப்புதல் கேட்க வேண்டும் என்பது இசுலாமிய விதி. "பொண்ணுக்கிட்ட ஒப்புதல் கேக்குற வழக்கம் நபிவழித் திருமணத்துல இருக்கு. "கபுல்" கேட்குறப்போ பொண்ணு, "கபுல்" இல்லைனு சொல்லிட்டா, அதுக்கப்புறம் நிக்காஹ் நடக்காது" (பக். 88) என்ற வரிகளிலிருந்து இசுலாமிய சட்டம் அம்மக்களால் பின்பற்றப்படுவதை அறியலாம்.

**பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள்**

**நிக்காஹ் (திருமணம்)**

நிக்காஹ் அன்று மாப்பிள்ளை, திருமணத்திற்கான "ரக்-அத்" நஃபில் தொழுகையை (சிறப்பு தொழுகை) முடித்துவிட்டு, மாப்பிள்ளைக்கான புதுத்துணியை போட்டு "ஷப்கஷ்" (ஊர்வலம்) செல்லத் தயாராக இருப்பார். அவரவர் வசதிக்கேற்ப குதிரைமேல் ஏறி மாப்பிள்ளை ஊர்வலம் நடைபெறும். அவரைச்சுற்றி அவரது நண்பர்களும், உறவினர்களும் ஊர்வலம் செல்வர். பள்ளிவாசல் வரை செல்லும் இந்த ஊர்வலம் கிளம்புவதற்கு முன் மாப்பிள்ளைக்கு "தூத்-மௌஜ்" (பால், பழம்) கொடுப்பர். மாப்பிள்ளையும் சேரா கட்டி இருப்பார். நிக்காஹ் நடக்கும் இடத்திற்கு மாப்பிள்ளையை அழைத்து சென்று மேற்குத்திசை நோக்கி அமர வைப்பர். இரு வீட்டாரிடமும் கபுல் (அனுமதி) கேட்டு நிக்காஹ் நோட்டில் மாப்பிள்ளை பெண்ணின் கையெழுத்தை வாங்கி விடுவர். பிறகு நிக்காஹ் நடக்கும் இடத்தில் திருமணத்திற்கான அறிவிப்போடு மஹர் பணத்தை குறித்தும் அறிவிப்பர். பின்பு பெண்ணின் தந்தையாரை அழைத்து மாப்பிள்ளையிடம் சம்மதமா என்று மூன்று முறை கேட்கச் செய்வர். மாப்பிள்ளை மூன்று முறையும் சம்மதம் என்று கூறியவுடன் நிக்காஹ் படித்து முடித்து விடுவர்.

பின்பு வந்திருக்கும் உறவினர்களுக்கு விருந்தளிப்பர். பெரும்பாலும் பலவ் (பிரியாணி) விருந்தில் அளிக்கப்படும். சாப்பிட்டு முடித்த உறவினர்கள் மொய் செய்து விட்டு செல்வர். "வந்துருந்த எல்லாத்துக்கும் லட்டு குடுத்தாங்க, மாப்பிள்ளை வீட்டு சார்பா" (பக். 93).

திருமணத்திற்கு வரும் உறவினர்கள் செல்லும் போது அவர்களுக்கு மாப்பிள்ளை வீட்டாரோ, பெண் வீட்டாரோ ஏதேனும் ஒரு பொருளை கொடுத்து அனுப்பி விடுவர். அன்று மத்தியானமே "ஜூல்வா" (நலுங்கு), அடுத்தநாள் வலிமா (வரவேற்பு) நடைபெறும்.

### பிள்ளை பிறத்தல் சடங்கு

பிள்ளை பிறந்த நான்காவது நாள் நல்ல நேரம் பார்த்து தாயையும், குழந்தையையும் தர்காவிற்கு அழைத்து செல்லும் வழக்கம் இருப்பதை இப்புதினம் எடுத்துரைக்கிறது. இதனை "நாலாவது நாளே, நல்ல நேரம் பார்த்து, ஆபில்பீயை, மால்சுவாணி தர்காக்கு கூட்டிட்டுப் போய் வந்துச்சு, ஜொகரா" (பக். 147) என்ற வரிகள் இதை எடுத்துரைக்கின்றன. மேலும் தர்காவிற்கு சென்று வந்தவுடன் வீட்டு வாசலில் நிறுத்தி தாய்க்கும், சேய்க்கும் சேர்த்து ஆரத்தி எடுத்து, சூறைத் தேங்காய் உடைத்து திருஷ்டி சுத்தி போடும் முறையையும் புதினம் எடுத்துரைக்கிறது. மேலும் பிள்ளை பிறந்த பதினோராவது நாளை "ச்ஷெட்டி" என்றும், நாற்பதாவது நாளை "ச்ஜில்லா" என்றும் கொண்டாடுவர். இந்த நாட்களில் உறவினருக்கு விருந்து கொடுக்கும் பழக்கமும் காணப்படுகிறது.

பெண் குழந்தை வயதுக்கு வரும் போது, உறவினருக்கு சொல்லி அனுப்பி தலைக்கு தண்ணீர் ஊற்றும் வழக்கமும் காணப்படுவதை புதினம் எடுத்துரைக்கிறது.

### இறப்புச் சடங்கு

உயிர் பிரியும் நிலை ஒருவருக்கு ஏற்பட்டால் அவருக்கு இறுதியாக ஊற்றும் பாணியை (பால்) "சக்ராத்கா பாணி" என்று கூறுவர். அதை உடல்நிலை சரியில்லாதவரின் வாரிசுகள் ஒவ்வொருவராக ஊற்றுவர். உயிர் பிரிந்தபிறகு, இறந்தவரின் உடலை குளிப்பாட்டுவர். மூன்று அண்டாக்களில் தண்ணீர் வைத்து அதில் இலந்தை மரத்து இலைகளைப் போட்டு வைத்திருப்பர். பின்பு மய்யத்தை (இறந்தவரின் உடலை) குளிப்பாட்டி "கஃபன் துணி" (வெள்ளைத்துணியை உடல் முழுவதும் கீழிருந்து மேலாக கட்டத் தொடங்குவர். முகத்தை கட்டும் முன் "தீதார்" (இறுதியாக முகத்தைப் பார்த்தல்) பார்க்கிறவர்கள் பார்த்துக் கொள்வர். பிறகு மய்யத்தை அடக்கம் செய்வதற்காக தூக்கிச் செல்வர். மய்யத்து வீட்டில் இருக்கும் போது சாம்பிராணி அல்லது பத்தி ஏற்றி வைப்பர்.

### முடிவுரை

மக்களின் வாழ்வியலை ஆய்வு செய்வதே பண்பாட்டு மானிடவியல் ஆகும். மக்களின் பழக்கவழக்கங்கள், சமயம் சார்ந்த நம்பிக்கைகள், மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள், பேசும் மொழி போன்றவை அவர்கள் சார்ந்த சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் அசைவுகளாக உள்ளன. ஒவ்வொரு சமுதாயமும் தான் சார்ந்த மக்களின் நடத்தை முறைகளை நெறிபடுத்துவதன் வழி தத்தம் சமுதாய பெருமையை நிலைநிறுத்துவதாக உள்ளன. இவற்றை அடுத்த தலைமுறைக்கும் கடத்த வேண்டும் என்ற நோக்கத்தால் அவற்றை கட்டாயமான முறையில் பின்பற்றவும் செய்கின்றனர். பிறப்பு, இறப்பு போன்றவை அனைத்து மனிதனுக்கும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன. அவற்றை ஒவ்வொரு சமுதாயமும் தனித்துவமிக்கத் தன்மையுடன் கையாளுகின்றன. அவற்றின் படிப்படியான வளர்ச்சி நிலையே பண்பாடாக வெளிப்படுகிறது. பண்பாட்டு மானிடவியலின் வழி ஆராயும் போது ஒரு சமுதாயத்தின் தனித்துவமான பண்பாடுகள் வெளிப்படுவதை காண முடிகிறது.

### துணைநூல் பட்டியல்

1. பக்தவத்சல பாரதி, (1990). *பண்பாட்டு மானிடவியல்*. மெய்யப்பன் பதிப்பகம்.
2. கு. வெ. பால சுப்பிரமணியன், பண்பாட்டு வரலாறு, 1, தமிழ் இணையக் கல்விக் கழகம்.
3. இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், இந்திய பாடநூல் கழகம்